செ.வெ.எண் : 920/2017 நாள் : 06.12.2017

**கன்னியாகுமரி மாவட்டம்**

**ஓகி புயலால் பாதிக்கப்பட்ட கன்னியாகுமரி, சுசீந்திரம், வாரியூர், ராஜாவூர், வழுக்கம்பாறை, கீழமடை, ஆரல்வாய்மொழி, பூதப்பாண்டி, குலசேகரம், பேச்சிப்பாறை**

**போன்ற பகுதிகளில் மின்விநியோகம் சீரமைக்கும் பணிகளை, மின் உற்பத்தி மற்றும் பகிர்மானம் தலைவர் திரு. சாய்குமார் இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு.**

---

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை, போர்க்கால அடிப்படையில் சீரமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அனைத்துத்துறை உயர் அலுவலர்களையும் உடனடியாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அனுப்பி, நிவாரண பணிகளை வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். முதல்வரின் உத்தரவின்பேரில், மின் உற்பத்தி மற்றும் பகிர்மானம் தலைவர் திரு. சாய்குமார் இ.ஆ.ப., அவர்கள் இன்று (06.12.2017) கன்னியாகுமரி, சுசீந்திரம், வாரியூர், ராஜாவூர், வழுக்கம்பாறை, கீழமடை, ஆரல்வாய்மொழி, பூதப்பாண்டி, குலசேகரம், பேச்சிப்பாறை, கோதையாறு போன்ற பகுதிகளில் நடைபெற்று வரும் மின் சீரமைக்கும் பணிகளை நேரில் ஆய்வு செய்து, அவர் கூறும்போது:

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை, போர்க்கால அடிப்படையில் சீர் செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மின்வாரியம் எடுத்து வருகிறது. தொடர்ந்து, பல்வேறு மாவட்டங்களிலிருந்து மின் வாரிய பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு, மலை கிராமங்கள் மற்றும் ஊராட்சிகளில் மின்விநியோகம் விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சில பகுதிகளில் மரங்களினால் மின்விநியோகம் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மரம் வெட்டும் தொழிலாளர்களை கொண்டு உடனடியாக மரங்கள் அகற்றப்பட்டு, மின்விநியோக பணிகள் முழுவீச்சில் மாவட்டம் முழுவதும் வழங்கப்பட்டு வருகின்றது. இப்பணிகள் அனைத்தும் இன்னும் இரண்டு தினங்களில் முடிவடைய தேவையான பணியாளர்களை கொண்டு, நடவடிக்கைள் எடுக்கப்பட்டு, நானும் நேரில் சென்று ஆய்வு செய்து வருகிறேன். மேலும், மின்விநியோகத்திற்கு தேவையான மின்கம்பங்கள், மின் உபகரணங்கள் உடனடியாக வரவழைக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றது என மின் உற்பத்தி மற்றும் பகிர்மானம் தலைவர் திரு. சாய்குமார் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**